முன்னிலை : திரு. பா. சரவணன், பி.எஸ்.சி.பி.எல்.,

சார்பு நீதிபதி, பெருந்துறை.

| |
|---|
| OS 5/2015 |
| வா.சா.1 ( சுரேஸ்குமார்) |
| நாள் 27.2.2020 |

1969ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (4ம் பிரதிவாதி தரப்பில்)**

வழக்கு தாக்கல் செய்த நாளிலும், தற்போதும் நான் குடியிருப்பது ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட ஈரோடு தாலூக்கா பகுதி என்றால் சரி. 4,5 பிரதிவாதிகளின் முகவரியும் ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட ஈரோடு தாலூக்கா பகுதி என்றால் சரி. 4ம் பிரதிவாதியிடம் நான் கேட்கும் பரிகாரம் 5ம் பிரதிவாதியிடம் மோசடியாக பணத்தை பெற்றுக் கொண்டார் என்பது தான் என்றால் சரிதான். 4,5 பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு மூலமானது ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட ஈரோடு தாலூக்காவிற்கு உட்பட்வை என்றால் சரி. நான் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் பாகக் கறார் கோரியுள்ளேன் என்றால் சரி. 4,5 பிரதிவாதிகளிடம் கேட்கும் பரிகாரம் பணத்தில் பாகம் ஆகும். வா.சா.ஆ 11 எஸ்சிஒபி 2/2016 ல் வழங்கப்பட்ட உத்திரவின் நகல் என்றால் சரி. மேற்படி ஆவணம் ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டு, உத்திரவு பிறப்பிக்கப்பட்ட ஆவணம் ஆகும். 4,5 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரத்தை பொறுத்த விசாரிக்க இந்நீதிமன்றத்தில் அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல. மேற்படி 4,5 பிரதிவாதிகளுக்கு எதிரான பரிகாரத்தை பொறுத்து ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியை அழைக்கழிப்பதற்கும், அவரை நஷ்டப்படுத்துவதற்கும் இந்நீதிமன்றததில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் தான் 4ம் பிரதிவாதிக்கு நஷ்ட ஈட்டு செலவுத் தொகை வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி வங்கிக்கு எனது தந்தையை 4ம் பிரதிவாதி கடந்த 5.5.2012 ம் தேதி அழைத்து சென்று ரூ.1,50,000த்தை வைப்பீடு செய்து அதில் தன்னையே நாமினியாக வைப்பீட்டில் நியமித்துக் கொண்டார் என்று சொல்லும் கால கட்டத்தில் 4ம் பிரதிவாதி இந்த ஊரிலேயே இல்லை என்றும், அவர் இந்த மாநிலத்திலேயே இல்லை என்றும், அவர் ஆந்திர பிரதேசம் கர்னூல் மாவட்டததில் உள்ள சாந்திராம் மருந்தாளுநர் கல்லூரியில் வைஸ் பிரசிடெண்டாக பணியாற்றி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. என் தந்தை இறந்த 06.01.2013 தேதியில் 4ம் பிரதிவாதி தென் ஆப்பிரிக்கா நாட்டில் அவர் பணியாற்றி வந்தார் என்றால் ஞாபகமில்லை. என் தந்தை இறந்த சமயம் நான் 4ம் பிரதிவாதியுடன் ஸ்கைப் மூலம் வீடியோ கால் பேசினேன் என்றால் ஞாபகமில்லை. இந்த விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கு மூலம் 4ம்

பிரதிவாதிக்கு பிரச்சினை ஏற்படுத்தி அவர் மூலம் துர்லாபம் அடையலாம் என்று இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தந்தையின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்றை தாக்கல் செய்தால் உண்மை விவரம் தெரிந்து விடும் என்பதால் தான் முதலில் அவற்றை தாக்கல் செய்யாமல் இருந்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 11 ஆவணத்தின் அடிப்படையிலேயே இந்த வழக்கானது ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்ய முடியும் என்பதை தெரிந்தே இந்த வழக்கை அவர்களுக்கு எதிராக துர்லாபம் அடையவேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் 4ம் பிரதிவாதியை பொறுத்து இந்த வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Uploaded by

SS